1990 ஏப்ரல் 17]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் ஒப்புதலோடு "வினா நேரம்" நீட்டிக்கப்படுகிறது.

திரு. இரெ. இராசமணிக்கம் : மிக முக்கியமான சாலையாக இருக்கிற காரணத்தால் அவசியத்தைக் கருதி மத்திய சர்க்காருக்கு நம்முடைய சர்க்கார் மூலம் தொடர்பு கொண்டு அந்த லெவல் கிராசிங்கை அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : முயற்சிப்பதில் ஒன்றும் தவறு இல்லை.

மின் வசதி.

*5493 திரு. கே. சின்னசாமி :
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

கொல்லிமலைப்பகுதியில் உள்ள அனைத்து ஊர்களுக்கும் மின் வசதி செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத்தலைவர் அவர்களே, கொல்லிமலையிலுள்ள 15 பெரிய கிராமங்கள் மற்றும் 216 சிற்றூர்களில் 14 பெரிய கிராமங்களுக்கும் 109 சிற்றூர் களுக்கும் ஏற்கனவே மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. மீதி யுள்ள இடங்களுக்கு மின் இணைப்பு கொடுக்க தக்க நடவடிகை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொல்லிமலையில் வாழும் மலைவாழ் மக்கள் இரவு நேரங்களில் குகையில் வாழ்வது போன்று வாழ்ந்து வருகிறார்கள். அங்கு மின் வசதி இல்லாத காரணத்தால் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் மண்ணெண்ணெய் பந்தம் பிடித்துக் கொண்டு தான் செல்ல வேண்டும். மலைவாழ் மக்களின் இந்த அவல நிலையைப் போக்க போர்க் கால நடவடிக்கை எடுத்து மின்சார தெரு விளக்கு வசதியை அரசு செய்து கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : போர்க்கால நடவடிக்கை எடுக்காமலேதான் 15 பெரிய கிராமங்களில் 14 பெரிய கிராமங்களுக்கும் மின் வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. 216 ஹேம்லெட்ஸ் சிறிய கிராமங்களில் 109 கிராமங்களுக்கு

தரப்பட்டிருக்கிறது. மீதி இருக்கிற 85, 86 கிராமங்களுக்குத் தர வேண்டும். அதைக் கூட உடனடியாக கொடுப்பதற்கு மின்சார வாரியம் தயாராக இருக்கிறது. ஆனால் இடையிலே ஒயர்களை இணைத்துச் செல்வதற்கு காட்டு இலாகா அனுமதி கொடுக்கவில்லை. மரத்தை கட் பண்ண வேண்டுமென்றால் காட்டு இலாகாவினுடைய அனுமதி தேவை. நாங்களும் பல முறை அவர்களோடு மன்றாடிக் கொண்டிருக்கிறோம். நீங்கள் எவ்வளவு ஆர்வத்தோடு கேட்கிறீர்களோ அதே ஆர்வத்தோடு அந்த மக்களுக்கு மின் இணைப்பு தர வேண்டும் என்று தான் நாங்கள் செய்கிறோம். ஆனால் அந்த வன இலாகாவினுடைய அனுமதி கிடைக்காததால் தாமதம் ஏற்பட்டிருக்கிறதே ஒழிய மின் இலாகாவினால் அல்ல.

திரு. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொல்லிமலையில் சில கிராமங்களில் சூரிய ஒளி விளக்கு அமைக்கப்பட்டுள்ளது. அங்கு ஒரு விளக்கு கூட எரிவது இல்லை. ஆகவே அந்த விளக்குகளை அகற்றி விட்டு மின்சார விளக்குகளை அமைக்குமாறும் ஊராட்சி மன்றங்களின் மூலமாக தெரு விளக்குக்காக மின்சார வாரியத் திற்கு பணம் கட்டி பல ஆண்டுகள் ஆகியும் இன்னும் மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை. இந்த நிலையை மாற்றி குறிப்பிட்ட நாளுக்குள்ளாக தெரு விளக்குகளை அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: அங்கு சூரிய ஒளி மூலம் மின் விளக்கு கொடுக்கப்பட்டிருப்பது டெம்பரரியான ஒன்று தான். நாங்கள் கம்பிகளை இழுத்து மின்சார வாரியத்தின் மூலமாகத்தான் அங்கு விளக்கு கொடுக்க வேண்டும் என்று இருக்கிறோம். அதுவரையில் அவர்கள் விளக்கு இல்லாமல் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் சூரிய ஒளி மூலம் அந்த விளக்குகளை அங்கே அமைத்திருக்கிறோம். காட்டு இலாகாவின் அனுமதி கிடைத்தவுடன் உடனடியாக அந்தப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படும்.

டான்சி தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு.

*9366 திரு. ஆர், எஸ், ஸ்ரீதர் :

*திரு, குமரி அனந்தன் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் உள்ள டான்சி தொழிலாளர்களுக்கு ஐந்தாவது சம்பள கமிஷன் சம்பள உயர்வு அமுல் செய்யப் பட்டதா ?

(ஆ) இல்லையெனில், எப்பொழுது அமுல் செய்யப்படும் ?